***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.169/2024 – P.W. 8 (LW -9 )***

| | |
|---|---|
| *Name* | சீமான் (காவல் உதவி ஆய்வாளர்) |
| *Father/Husband's Name* | கோவிந்தசாமி |
| *Village* | சென்னை மாநகரம் கண்ணகி நகர் |
| *Taluk* | சென்னை |
| *Religion* | |
| *Age* | *59* |

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 17.02.2026*

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது சென்னை மாநகரம் கண்ணகி நகர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 16.04.2024 ம் தேதி மன்னார்குடி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற மருத்துவ தகவலின்படி அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த ஆல்வார் லிவிங்ஸ்டன் என்பவரை விசாரித்து புகார்வாக்குமூலம் பதிவு செய்து நிலை மனு எண்.115/2024 வழங்கினேன். பின்னர் சாட்சிகளை விசாரணை செய்து, கடந்த 23.04.2024 ம் தேதி காவல் நிலைய குற்ற எண்.62/2024 பிரிவுகள் 294(பி), 324, 427, 506(2), 379 இ.த.ச. வின் வழக்கு வழக்கு பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**2.** பின்னர் 23.04.2024-ம் மாலை 6.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் அலெக்ஸ்குமார், மற்றும் ரோபின்ராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். ( **மாதிரிவரைபடம் அ.சா.ஆ. 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**) பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 மற்றும் பார்வைமகசர் சாட்சிகளான 6 மற்றும் 7

ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரிகளை தேடிச்சென்றபோது 1 முதல் 3 எதிரிகள் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் கிடைத்த பிணை உத்தரவின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி தக்க பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என்பது தெரியவந்தது. பின்னர் இவ்வழக்கில் காயமடைந்த ஆல்வார்லிவிங்ஸ்டன் மெர்சி, அமலநாதன், ஜான்நெப்போலியன் ஆகியோர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு. ராம்சீனிவாசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகளை பெற்றேன். (**மெர்சி என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.5 ஆகவும், அமலநாதன் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ. 6 ஆகவும், ஜான் நெப்போலியன் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ. 7 ஆகவும், ஆழ்வர் லிவிங்ஸ்டன் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.8 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது**)

**3.** பின்னர் சாட்சிகளை விசாரணை செய்த வகையில் எதிரிகள் வாதியை தகாத வார்தையால் திட்டிவிட்டு வெட்டி சென்றுள்ளார்கள் என்றும், நகைகளை எடுக்க வில்லை என்றும், எதிரிகள் மீதுள்ள காழ்புணர்ச்சி காரணமாக மிகைப்படுத்தி எதிரிகள் நகையை திருடிவிட்டதாக புகார் அளித்த விவரம் தெரியவந்ததால் சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 427 506(2), 379 இ.த.ச. விலிருந்து பிரிவுகள் 294(பி), 324, 427, 506(2)இ.த.ச. வின் சட்டப்பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை தாக்கல் செய்தேன். (**சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) இத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 294(பி), 324, 427, 506(2)இ.த.ச. வின் கீழ் கடந்த 03.06.2024-ம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** புகார்தாரர் சம்பவத்தின் போது அவரது வாகனமாக அப்பாச்சி இருசக்கர வாகனம் சேதமடைந்ததாக புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அவர் கொடுத்த புகாரிலோ எனது விசாரணையிலோ பல்சர் இருசக்கர வாகனம் சேதமடைந்ததாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் எனது விசாரணையின்படி சம்பவத்தின்போது எதிரிகள் அ.சா.1 முதல் 3 வரையிலான

நபர்களை தாக்கியதாகவும், அவர்கள் சிகிச்சையிலிருந்தபோது நான் விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு இல்லாமல் அ.சா.2 மற்றும் 3 னினை எதிரிகள் தாக்குவது குறித்து அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளிக்க வந்தபோது அங்கு காவலர்கள் இல்லாததால் பிறகு வந்து புகார் கொடுங்கள் என்று காவல் நிலையத்தார் புகார்தாரரிடம் கூறி அவரை திருப்பி அனுப்பியபோது அவரை பின்தொடர்ந்து எதிரிகள் அவர்களை தாக்கியதாக புகாரிலும் எனது விசாரணையிலும் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை.

2. அ.சா.1 வீட்டிலிருந்து கதவு, ஜன்னல் கண்ணாடி ஆகியவற்றை எதிரிகள் கல்லால் அடித்து சேதப்படுத்தியதாக அவரது புகாரிலும், எனது விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1-ஐ எதிரிகள் அருவாளால் தலையில் வெட்டி காயப்படுத்தியதாக சொல்லியுள்ளாரே தவிர கட்டையால் அடித்து காயப்படுத்தியதாக அவரது புகாரிலும் எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தது 3 மணி என்றால் சரிதான். மாலை 6 மணிக்கு மருத்துமனைக்கு சென்றுள்ளார்கள் என்றால் சரிதான். 3 மணி நேரம் காலதாமதமாக மருத்துவ மனைக்கு சென்றது குறித்த காரணம் குறித்து சாட்சிகள் எதுவும் சொல்லவிலை என்றால் சரிதான்.

3. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பாலமுருகன் வீடாகும். அவ்வாறு தான் பார்வைமகசரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவரது புகாரிலும் எனது விசாரரைணயிலும், காயமடைந்த நபர்களை எதிரிகளில் யார், யார் என்ன ஆயுதம் கொண்டு தாக்கினார்கள் என்பது குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் எதிரிகள் சம்பவத்தின்போது பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்களை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

4. இவ்வழக்கில் காணாமல் போனதாக சொல்லப்படும் 2 பவுன் செயினை எதிரிகள் திருடிவிட்டதாக மிகைப் படுத்தி புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிகள் 2 பவுன் செயினை திருடிவிட்டதாக கூறி நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்திருந்தால் அது தவறாகும். இவ்வழக்கு சம்பவமானது 16.04.2024 என்றால் சரிதான். ஆனால் கடந்த 23.04.2024-ம் தேதியன்று பதிவு செய்யப்பட்டதற்கான காரணம் என்னவென்றால் புகாரை பெற்று மனு ரசீது வழங்கி

பின்னர் சாட்சிகள் விசாரணை முடித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் சொல்வதுபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 மற்றும் அவரது குடும்பத்தினர் எதிரிகளை தாக்க சென்று அவர்கள் தவறி கீழே விழுந்து அதன்மூலம் கிடைத்த காயத்தை வைத்து எதிரிகளை தொடர்புபடுத்தி காலதாமதமாக கொடுக்கப்பட்ட புகாரை சரிவர விசாரணை செய்யாமலும், சம்பவயிடத்திற்கு செல்லாமலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் எதிரிகளால் சேதப்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் இருசக்கர வாகனம் மற்றும் ஜன்னல் கண்ணாடி துண்டுகள் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 17.02.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.